செய்தி வெளியீடு எண் : 2376 நாள் : 30.11.202

<u>செய்தி வெளியீடு</u>

**வடகிழக்குப் பருவ மழை, நேற்று (29.11.2023) முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், இன்று (30.11.2023) காலை முதல், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள், மழைநீர் தேங்கி நிற்கும் இடங்களில் நடைபெறும் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள்**

நேற்று (29.11.2023) முதல் சென்னையில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் காரணமாக, "கன மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள் உள்ளிட்டோர் நிவாரணப் பணிகளை மேற்கொள்வீர்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அறிவுறுத்தலின்படி, இன்று (30.11.2023) காலை முதல், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு அவர்கள், கிண்டி கத்திபாரா, ஜவஹர்லால் நேரு சாலை (முழுவதும்), உதயம் தியேட்டர் சந்திப்பு போன்ற பகுதிகளுக்குச் சென்று, மழைநீர் தேங்கியுள்ளதா என்பதையும், மழைநீர் வடிகால்வாயில், அடைப்பின்றி மழைநீர் வேகமாக வடிகிறதா என்பதையும் ஆய்வு செய்தார்கள். மேலும், மழைநீர் தேங்கும் இடங்களில் போதுமான பணியாளர்கள், மோட்டார் பம்பு, JCB, மரம் அறுக்கும் இயந்திரங்கள் கையிருப்பில் வைத்திருக்க அறிவுறுத்தினார்கள்.

மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் மோட்டர் பம்பு மூலம் வெளியேற்றப்படும் இடங்களையும் பார்வையிட்டு, விரைவாக வெளியேற்றிட வேண்டுமென்று அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் திரு. இரா.சந்திரசேகர், கோட்டப் பொறியாளர் திரு. வ.ரவி, உதவிப்பொறியாளர் திரு. ராம்நரேஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in